செ.வெ.எண்:4 நாள்:02.10.2020

**பெரம்பலூர் மாவட்டம்**

**அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, கதர் விற்பனை அங்காடியில் தீபாவளி சிறப்பு விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

**கதர் தீபாவளி சிறப்பு விற்பனை இலக்கு ரூ.25 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது–மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த தினமான இன்று (02.10.2020) பெரம்பலூர் பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப., அவர்கள், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.தமிழ்ச்செல்வன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து கதர் விற்பனை அங்காடியில் தீபாவளி சிறப்பு விற்பனையினை துவக்கி வைத்தார்.

அண்ணல் காந்தியடிகளின் பிறந்ததினமான (அக்டோபர் 2 ஆம் தேதி) முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் பெரம்பலூர் மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை மற்றும் தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் சார்பில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பெரம்பலூர் பழையபேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் விற்பனை நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப்படத்தை திறந்துவைத்து மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் தீபாவளி கதர் சிறப்பு விற்பனையை துவக்கி வைத்தார்.

இந்தியதிருநாட்டின் இதயமாகவிளங்கும் கிராமப்புற ஏழை, எளிய நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் உயரிய சேவையை முதற்குறிக்கோளாகக் கொண்டு, தமிழ்நாடு கிராமத்தொழில் வாரியம் செயல்பட்டு வருகிறது. கடந்த 2019-ம் ஆண்டு பெரம்பலூர் மாவட்டத்தில் தீபாவளி சிறப்பு விற்பனைக்கு ரூ.20 இலட்சம் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு ரூ.7.5 லட்சம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டு 2020-ம் ஆண்டிற்கு ரூ.25 லட்சம் இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், கதர் விற்பனையை ஊக்கப்படுத்துவதற்கும், வாடிக்கையாளர்களின் நலன் கருதியும், கதர் விற்பனை அங்காடியில் மத்திய, மாநில அரசுகள் கதர், பட்டு, பாலிஸ்டர் ரகங்களுக்கு 30 சதவிகிதம் வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது,விற்பனை இலக்கினை முழுமையாக எய்திடும் பொருட்டு, அனைத்து அரசு அலுவலர்களுக்கும் ஆசிரிய பெருமக்களுக்கும் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்ற பணியாளர்களுக்கும் எளிய கடன் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் அனைத்து கதர் அங்காடிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் துவக்கப்பட்டுள்ள தற்காலிக கதர் விற்பனை நிலையங்களில் பெருமளவில் கதர் ரகங்கள் வாங்குவதன் மூலம் கிராமப்புற ஏழை, எளிய நூற்போர்கள் மற்றும் நெய்வோர்களின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில், கதர் ரகங்களை வாங்கி பயன்படுத்தி இத்தொழிலுக்கு அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும். நமது பாரம்பரிய உடைகளான வேட்டி, சேலைகள் புதிய ரகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை அரசு அலுவலர்களும் மற்றும் பொதுமக்களும் வாங்குவதன் மூலம் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் மற்றும் நூற்பாளர்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்களிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜேந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கே.நாகராஜபூபதி, நகராட்சி ஆணையாளர் திரு.குமரிமன்னன், காதி விற்பனை மேலாளர் திரு. இளங்கோவன் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**